**செய்தி வெளியீடு**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.64** **நாள் : 31.03.2025**

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் விக்டோரியா பொது அரங்கம் மற்றும் கொளத்தூர் , திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள விக்டோரியா பொது அரங்கில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.32.62 கோடி மதிப்பில் அதன் தொன்மை மாறாமல் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பணிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று (31.03.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர், முரசொலி மாறன் பூங்காவினை மேம்படுத்துவது குறித்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க.நகர் மண்டலம், எஸ்.ஆர்.பி. கோயில் தெருவில் உள்ள கலைஞர் மு. கருணாநிதி பூங்காவினை மேம்படுத்துவது குறித்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினார். இதன் தொடர்ச்சியாக, திரு.வி.க.நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள பெண்கள் உடற்பயிற்சிக் கூடத்தினைப் பார்வையிட்டு, நல்ல முறையில் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, முத்துகுமாரப்பா சாலையில் ரூ.13.47 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக் கூடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**இந்நிகழ்வுகளில், மாண்புமிகு மேயர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க விக்டோரியா பொது அரங்கினை புனரமைக்கும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 2023ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து மறுசீரமைப்புப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீதிக்கட்சி தொடங்கிய இடம் இந்த விக்டோரியா பொது அரங்கம். இந்த அரங்கில் என்னென்ன சிறப்புகள் இருந்ததோ, அவற்றை பொதுமக்கள் அறியும் வகையில் அருங்காட்சியகமாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தக் கட்டடத்தின் முதல் தளத்தில் ஒரு கலையரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மறுசீரமைப்புப் பணிகளுக்கு ரூ.32.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வருகின்ற ஜீன் மாதத்திற்குள் இந்தப் பணிகள் முடிக்கப்படும்.

பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முத்துகுமாரப்பா சாலையில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக் கூடப் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கூடம் 800 இருக்கைகளுடன் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், முரசொலி மாறன் பூங்காவினை மேம்படுத்துவது குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவாக ஒன்றிய அரசின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நாணயம் வெளியிடப்பட்டது. அதன் நினைவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முரசொலி மாறன் பூங்காவிலோ அல்லது பெருநகர சென்னை மாநகராட்சியின் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியின் பிற பூங்காவிலோ முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு எல்லார்க்கும் எல்லாம் என்கிற கொள்கையை சாதி, சமயம் மற்றும் மதங்களுக்கு அப்பாற்பட்டு சுதந்திரமான சுவாசக்காற்றை அந்தந்த மதத்தினர் விரும்புகின்ற வழிபாடுகளை நடத்துவதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்ற ஆட்சியாக உள்ளது. ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஓட்டினார். அதில் எந்தவிதமான மதம் மற்றும் சாதி சம்பந்தப்பட்ட இடர்பாடுகள் இல்லாதிருந்தது. கண்ணம்மா தேவி தேர் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு மேலாக ஓடாமல் இருந்தது. நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இருபிரிவினருக்கிடையே இருந்த மோதல்களை முடிவிற்கு கொண்டு வந்து கண்ணம்மா தேவி தேரையும் ஓட்டிய பெருமை நம்முடைய முதல்வர் அவர்களைச் சாரும்.

திரௌபதி அம்மன் கோயில் பூஜை முறைகள் அன்றாடம் நடைபெறுவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு வார காலத்திற்குள்ளாக அந்தத் திருக்கோயில் திறக்கப்பட இருக்கிறது. நம்முடைய முதல்வர் ஆட்சி

பொறுப்பேற்றபிறகு தான் சேலம் போன்ற பல நகரங்களில் மதத்தால், இனத்தால் அல்லது மொழியால் பிளவுபட்டிருந்த இருவேறு பிரிவினர்களுக்கிடைய தீர்க்கப்படாமல் இருந்த மோதல்களை சமாதானப்படுத்தி, பல வருடங்களாக தரிசனம் இல்லாமல் பூட்டிக்கிடந்த 40 திருக்கோயில்கள் மீண்டும் திறக்கப்பட்ட பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையே சாரும். அந்த வகையில் திரௌபதி அம்மன் திருக்கோயிலும் வெகுவிரைவில் பக்தர்கள் இறை தரிசனத்திற்கு ஒப்படைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (பணிகள்) திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜ், திருமதி புனிதவதி எத்திராஜ், திருமதி ஸ்ரீதனி, திருமதி சாரதா, திருமதி யோகப்பிரியா, திருமதி அமுதா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**